★ விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

மலர் 36 பங்குனி 6 ஜ. ஆகி 15 இதழ் 67
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 19-3-84

யாழ்ப்பாணம்.

## அடையாள அட்டை இல்லாத 150 பேர் வவுனியாவில் கைது

(வவுனியா)

வவுனியா நகரில் நேற்று முன்தினம் இராணுவத்தினரும், விமானப்படையினரும் சேர்ந்து நடத்திய சோதனையில் அடையாள அட்டை வைத்திருக்காத 150 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

வவுனியா நகரிலிருந்து எவரும் வெளியேறாத வகையில் சுற்றி வளைக்கப்பட்டு, பஸ்கள் மினிபஸ்கள் நிறுத்தப்பட்டு சோதனையிடப்பட்டன.

நேற்றுக்காலை, பொலிஸார் நடத்திய சோதனையின் போதும் அடையாள அட்டை இல்லாதவர்கள் நீண்டநேரம் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

இராணுவத்தினராலும், விமானப்படையினராலும் கைதான 150 பேரும், பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டு, பொலிஸ் நிலையம் கொண்டுசெல்லப்பட்டு, விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

வவுனியா நகரத்திற்கு வருவோரும், வவுனியா ஊடாக, வாகனங்களில் பயணம் செய்பவர்களும், கட்டாயமாக அடையாள அட்டை வைத்திருக்க வேண்டும் என்று பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

யாழ். ரயில் நிலையத்தில் 'அமிர்' ஈழநாடுவுக்கு சிறப்புப் பேட்டி

# மகா சங்கத்தினர் - கூட்டணி

# நாளை சந்திப்பு

## "கூட்டணிப் பொதுச்சபை தற்போதைக்கு கூடாது"

(கே. யோகநாதன்)

**தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் நாளை மாலை மகாசங்கத்தினரைச் சந்தித்து சர்வகட்சி மாநாடு குறித்து பேச்சுவார்த்தை நடத்துவார்.**

யாழ். ரயில்நிலையத்தில் வைத்து "ஈழநாடு"க்கு நேற்று நண்பகல் அளித்த பேட்டியின் மேற்கண்டதவலைத் தெரிவித்த திரு. அமிர்தலிங்கம், கூட்டணி பொதுச்சபைக்கூட்டம் எதுவும் தற்போதைக்கில்லை என்றும் பொதுச்சபையைக் கூட்டுவதற்கு ஏற்பாடு நடைபெறுவதாக வெளிவந்த பத்திரிகைச் செய்தியிலும் (ஈழநாடு அல்ல) உண்மையில்லை என்றும் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வந்திருந்த திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று நண்பகல் கொழும்பு பயணமானார். அவரைச்சந்திக்க யாழ். ரயில் நிலையம் சென்றிருந்தபோது, கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரமும் அங்கு காணப்பட்டார்.

திரு. அமிர்தலிங்கத்திடம் "வட்டமேசைமாநாடு அடுத்த இருதினங்களில் முடிந்துவிடுமா இல்லை தொடருமா" என்று கேட்டபோது! "அதுபற்றித் தெரியவில்லை அவர்களுக்குத் தான் வெளிச்சம்" என்றார்.

நாளைமாலை மகாசங்கத்தினரைச் சந்திக்கவிருப்பதாகவும் மறுநாள் பௌத்த சங்கம் ஒன்றைச் சேர்ந்தவர்களை சந்திக்கப்போவதாகவும் திரு. அமிர்தலிங்கம் கூறினார்.

இதேவேளை சர்வகட்சி மாநாடு நாளைமாலை மீண்டும் ஆரம்பமாகிறது. (கு)

## தமிழ் காங்கிரஸும் சந்திக்கிறது

(யாழ்ப்பாணம்)

மகாசங்கத்தினரையும், மற்றொரு பௌத்த சங்கத்தினரையும் சந்திக்க விருப்பதாகத் தமிழ் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் நேற்றுத்தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியும் தமிழ் காங்கிரசும் மட்டுமே இவர்களைச் சந்திக்கவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இரு பௌத்த சங்கங்களும் ஒன்றாகச் சேர்ந்து தமிழ் கட்சிகளைச் சந்திக்க விரும்பாததினாலேயே தனித்தனியான சந்திப்பு நடைபெறுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நில உரிமை கோரி புத்தூரில் உண்ணாவிரதம்!

(யாழ்ப்பாணம்)

குடி இருந்த நிலத்தின் உரிமை கோரி, புத்தூரைச் சேர்ந்த மக்கள் இம்மாதம் 31ம் திகதி ஒருநாள் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தவுள்ளனர்.

புத்தூர் மேற்கு மருதடிக் கிராமத்தைச் சேர்ந்த 15குடும்பங்கள், குடியிருப்பதற்கு உரிமைகோரி இவ்வுண்ணாவிரதப்போராட்டத்தை நடத்துவ தெனமுடிவு செய்துள்ளனர்.

உண்ணாவிரதம் போராட்டத்தை முன்னாள் எம். பி. திரு. எம். சி. சுப்பிரமணியம், திரு. க. சின்னத்துரை ஆகியோர் ஆரம்பித்துவைப்பார்கள். திரு. இராசேந்திரன்

(8-ம் பக்கம் பார்க்க)

## 10 இளைஞர்களும் விடுதலை

(வவுனியா)

வவுனியா பகுதியில் இராணுவத்தினரால் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட 10 இளைஞர்கள் விசாரணையின் பின்னர் நேற்று விடுதலைசெய்யப்பட்டனர்.

இவர்கள் வவுனியா நகர மண்டபத்திலுள்ள முகாமில், மூன்று தினங்களாக விசாரணை செய்யப்பட்டனர்.

இந்த இளைஞர்கள், கதிரம்குளம், குடியிருப்பு ஆகியபகுதியில் நடந்தசோதனையின்போது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர். (எ)

## அரசியல் பிரமுகரின் மனைவி விசாரணை

(மட்டக்களப்பு)

கிழக்குமாகாண அரசியல் பிரமுகர் ஒருவரின் மனைவி பாதுகாப்புப்படையினரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

1981-ல் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தலில் ஒரு அரசியல் கட்சியில் நான்காவது வேட்பாளராகப் போட்டியிட்ட மேற்படிப் பிரமுகர் பாதுகாப்புப் படையினரின் விசாரணையில் சமுகமளிக்காமல் தலைமறைவாக இருப்பதைத் தொடர்ந்தே இவரது மனைவி பாதுகாப்புப்படையினரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

## இவ்வாரம் வெளிவரும்!

(இ. கந்தசாமி)

"தமிழ்மொழி மூலம் விஞ்ஞானப்பட்டதாரி ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்கள் இவ்வார இறுதியில்வெளிவரும். இவர்களுக்கானகடிதங்களும்அடுத்த வாரமளவில் அனுப்பிவைக்கப்படும்

8ம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் புதிய சுவரொட்டிகள்

(மானிப்பாய்)

இயக்கப்பணத்தைத் துஷ்பிரயோகம் செய்பவர்களுக்கும்

(8-ம் பக்கம் பார்க்க)

# கடத்தல் முறியடிப்பு;

## 6 பேருக்கு ரூபா 15 லட்சம் அபராதம்!

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கடலில் காரைநகர் கடற்படையினர் நடத்திய 'வேட்டை'யில் ரூ. 5,75,000பெறுமதியான கடத்தல் பொருள்கள் கைப்பற்றப்பட்டன.

சேர்ந்து சுற்றிய கடற்படையினர் படகொன்றைத் தடுத்து நிறுத்திசோதனையிட்டபோதே பெறுமதியான சேலைகளும், சட்டைத்துணிகளும் கைப்பற்றப்பட்டன.

இதுசம்பந்தமாக சுங்கசேகரிப்பாளர் திரு. எஸ். கணேஷ் நடத்திய விசாரணையைத் தொடர்ந்து படகில் வைத்து கைது செய்யப்பட்ட அறுபேருக்கும் மொத்தம் பதினைந்து லட்சம் அபராதம் விதிக்கப்பட்டு, 60,000ரூபா பெறுமதியான வள்ளமும் பறிமுதல் செய்யப்பட்டது.

தமிழ்ப் புத்தாண்டுச் சலுகை

தமிழர் நிதியம்

நிதி நிறுவனம்

உங்கள் நிரந்தர வைப்புகளுக்கு

36% அதிக வட்டி

மாதாந்தச் சலுகை

20-3-84 முதல் - 20-4-84 வரை

வழங்கவுள்ளார்கள்.

"தங்கச்சுரங்கம்" அதிர்ஷ்ட முதலீட்டுத் திட்டம்

01-03-84 இல் நடைபெற்ற பரிசிழுப்பில் பரிசுபெற்றோர்

(1) கே. பொன்னையா, மாந்தை திருக்கேதீஸ்வரம். இலக்கம் 01253

(2) N விஜயன், வாடகைகள், வரிகள் பிரிவு யாழ். மாநகர சபை-யாழ்ப்பாணம். 00172

உங்கள் தங்க நகைகளின் பேரில் ஆகக்கூடிய கடன் வசதி

காலதாமதமின்றிப் பெற உடனே நாடுங்கள்

தமிழர் நிதியம் 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 22437 1878

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பாலை, முதிரை, தீராந்தி 4'' X 3'' - 5'' X3'' - 5'' X4'' 9'' X 3'' 6'' X2'' 7'' X2''ம் முதிரை - மகோகனி மற்றும் இனங்கள் சலவைகளையும் இக்கரை விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும் வி. பகவதிப்பிள்ளை 14/1 பிளச்சலி லேன், மண்டிக்குளி. 1392

தெல்லிப்பழையில் பண்டத்தரிப்பு றோட்டில் மகாஜனாக் கல்லூரிக்கு சற்று முன்பாக முன்னர் மண்ணெண்ணெய் விற்பனை நிலையம் அமைந்த காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க. பா. ஹரிச்சந்திர வசந்தகிரி, பசுமணியம் றோட், தெல்லிப்பழை 1420

சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியில் 7 பரப்பு காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: சதா கிறீம் ஹவுஸ் கோட்டடி சாவகச்சேரி. 1426

கொக்குவில் 3½ பரப்புக் காணி உடன்விற்பனைக்குண்டு வீடு கட்டவோ தோட்டம் செய்வதற்கோ உகந்தது. தொடர்பு: 160 பிரதான வீதி, (Main Street) யாழ்ப்பாணம். 1437

வியாபார ஸ்தாபனங்களுக்குரிய இரும்புப் பெட்டிகள் விற்பனைக்குண்டு. பழுதடைந்த இரும்புப் பெட்டிகளும் திருத்திக் கொடுக்கப்படும். எவர் சில்வர் மாளிகை, 11, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 1449

## விற்பனைக்கு

பௌரஹா பாம் ஒருநாள் இறைச்சிக் கோழிக்குஞ்சுகள் (Bauraha Farm day old HiBro Broilers) 26-3-84 பெற்றுக் கொள்ளலாம். உடன் தொடர்பு கொள்ளவும். S. புவனேந்திரன், ''இன்பம் வளவு'', கோவில் றோட், மல்லாகம். 1453

குரும்பசிட்டி முதலியார் வைரவகோவிலடியில் 10பரப்பு காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு; அத்துடன் நஷனல் குளிர்சாதனப்பெட்டியும் விற்பனைக்குண்டு. T. கோபாலபிள்ளை, 141/3, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். 1455

## தேவை

குக்ஸ் பிறண்ட் உணவுப் பொருட்களுக்கு ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. மாதச்சம்பளமும், கமிஷனும் தரப்படும். நேரிலோ, அல்லது விண்ணப்பமூலம் விண்ணப்பிக்கவும். 79,2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23364. (1454)

## WANTED

Partly qualified lady Accountant seeks employment Please contact Advt No.1481 C/o Eelanadu, Jaffna. 1481

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

பதுளை மடுல்சிமா பத்தாவத்தையைச் சேர்ந்த காலஞ்சென்ற விக்பிறட் தர்மரஞ்சன் லோறன்ஸின் மரணசாதனமற்ற சொத்துக்களின் விடயத்தில்.

-மரணமெய்தியவர்

இல. தத்துவம் / 3784

விக்பிறட் தர்மரஞ்சன் லோறன்ஸ் கைம்பெண் கிறேஸ் விமலராணி லோறன்ஸ், 106, 2ம் குறுக்குவீதி, யாழ்ப்பாணம்.

—மனுதார்

இந்நீதிமன்றத்தில் மேற்குறித்த இலக்கங்கொண்ட மரணச்சொத்து நிர்வாகத் தத்துவ வழக்கு மேற்குறித்த மரணமெய்தியவரின் மரண சாதனமற்ற சொத்துக்களுக்கு நிர்வாகத் தத்துவப் பத்திரம் பெற மேற் சொல்லப்பட்ட மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு அதற்கான பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1984ம் ஆண்டு சித்திரை மாதம் 6ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன கட்டளையாக்கப் படலாகாதென்பதற்குக்காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகிறீர்.

1984-ம் ஆண்டு மாசி மாதம் 27-ம் திகதி.

மன்றின் கட்டளைப்படி

கு. குலசிங்கம்,
பதிவாளர்.

தயாரித்தவர்:
அ. மரியாம்பிள்ளை,
25/1, 4ம் குறுக்குத்தெரு.
யாழ்ப்பாணம்.
மனுதாரின் சட்டத்தரணி.
1327

**வியாபாரம் பெருக**
**விளம்பரம் செய்க**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### வெற்றிடம்

சைவ சித்தாந்தத்துக்கான அறக்கொடைப்பேராசிரியத் தவிசு. (Endowment Chair)

சைவசித்தாந்த அறக்கொடைப் பேராசிரியத் தவிசுக்குத் தகைமையுடைய வேட்பாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக்கொள்ளப் பெறும்.

2. இப்பதவிக்கான விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்வதற்கான கடைசித் தேதி 1984 யூன் 15 ஆகும்.
3. விண்ணப்பப் படிவங்களையும் விபரங்களையும் இவ்வலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்.
4. விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் 23 X 10 சதம மீட்டர் அளவுள்ள கடித முகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையொன்றும் இணைத்தனுப்பப்படல் வேண்டும்.

பதிவாளர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
12-3-1984. 1346

## உடற்பயிற்சிப் போட்டிகள்

(கரவெட்டி)

உடுப்பிட்டி கல்வி வட்டாரப் பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை கரணவாய் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

இதற்கான ஒழுங்குகளை வட்டாரக்கல்வி அதிகாரி திரு. வ. க. சகரபாதம் மேற்கொண்டுள்ளார். லெ

## கேள்வி அறிவித்தல்

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பின்வரும் சிற்றுண்டிச் சாலைகளை நடாத்துவதற்காக, இலங்கை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழக நிதியாளரினால் 17-04-1984 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. திருநெல்வேலி இடவளவு
2. மருத்துவபீடம்
3. சித்தவைத்தியப் பகுதி, கைதடி

கேள்விப் படிவங்கள் இப்பல்கலைக்கழகத்தின் தலைச் சேவைகள் கிளையிலிருந்து மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணமாக 500/-ரூபாவும், மீளளிக்கப்படாத கட்டணமாக 50/-ரூபாவும் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப்படிவங்களில் அனுப்பப்படாத கேள்விகள் நிராகரிக்கப்படும்.

ஒவ்வொரு சிற்றுண்டிச் சாலைக்கும் தனித்தனியாக கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

மேலதிக விபரங்களை காரியாலய நேரங்களில் என்னிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்.

1984-03-13. 1313

## இலங்கைப் பல்கலைக்கழகங்களின் வெளிவாரிப் பட்டப்படிப்புகள் — 1984/85

### புதிய மாணவர்களை அனுமதித்தல்

இலங்கைப் பல்கலைக்கழகப் பாடநெறிகளான
கலை, விஞ்ஞானம், சட்டம், வர்த்தகம்
ஆகியவற்றுக்கான விரிவுரைகளுக்கு
க. பொ. த உயர் பரீட்சையில்
மூன்று பாடங்களில் சித்தியெய்தியவர்கள்
பதிவு செய்துகொள்ளலாம்.

விபரங்களையும் விண்ணப்பப்படிவத்தையும்
ரூபா 5/- செலுத்தி நேரில்/தபாலில் பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி 25-03-1984 வரை நீடிக்கப்பட்டுள்ளது.**

உதவிப் பதிவாளர்,

**பட்டப்படிப்புகள் கல்லூரி,**

148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## யா/கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகாவித்தியாலயம்

(காரைநகர் இந்துக்கல்லூரி)

பாடசாலையிலிருந்து வெளியேறிய மாணவருக்கான

### பகுதி நேர தொழில் நுட்பக் கல்வி நெறி

கீழ் வரும் பயிற்சிநெறிகளுக்கான விண்ணப்பங்கள் 31-03-1984-ம் ஆண்டுக்கு முன் கோரப்படுகின்றன.

| பயிற்சிகள் | பயிற்சிக்காலம் |
| --- | --- |
| 1. மரத்தளபாடம் செய்தல் (இயந்திர சாதனங்கள் மூலம்) | 10 மாதங்கள் |
| 2. உடை தைத்தல் (நவீன தையல் இயந்திரங்கள் மூலம்) | 10 மாதங்கள் |

மேலதிக விபரங்களுக்கு கல்லூரி அதிபருடன் தொடர்பு கொள்ளவும்.

**தகைமை வாய்ந்த போதனாசிரியர் தேவை**

மரத்தளபாடம் செய்தல், உடை தைத்தல்
மேற்படி பயிற்சிகளை கற்பிப்பதற்கு தகைமை வாய்ந்த போதனாசிரியர் தேவை.

மேலதிக விபரங்களுக்கு கல்லூரி அதிபரிடம் தொடர்பு கொள்ளவும். (1459)

## Jaffna College Technical Institute Vaddukoddai

# New Admission For 1984/85

### TECHNICIAN COURSES

Applications for admission to Technician Courses commencing in May 1984 are accepted till 16th APRIL 1984.

Students of either sex under 20+ age, passed six subjects at the G.C.E (O/L) with credit passes in Maths, Science and English can apply. Courses are conducted in English medium.

1. TECHNICIAN CERTIFICATE (1½ years) — Fees Rs 750-per year
   - (a) Airconditioning and Refrigeration — CGLI-257
   - (b) Automobile Technology — CGLI-390
2. TECHNICIAN DIPLOMA (3 years) — Fees Rs 1000/-per year
   - (a) Electronics and Telecommunication — CGLI-271
   - (b) Electrical Engineering — CGLI-803
   - (c) Mechanical Engineering — CGLI-255
   - (d) Civil and Quantity Surveying — CGLI-627
3. DIPLOMA IN COMPUTER PROGRAMMING (1 year) Fees Rs.2000/-per year
   - (a) Computer Programming and Information Processing CGLI-747

### CRAFT COURSE

Students who have studied up to G. C. E. (O/L). physically fit and have aptitude to learn an Engineering Trade is eligible for admission.

Courses are of 1 year duration and conducted in Tamil medium with lessons in English and Engineering Drawing

| COURSE | FEES | DEPOSIT |
| --- | --- | --- |
| (a) Welding Practice | 500-00 | 1000-00 |
| (b) Foundry Practice | 600-00 | 500-00 |
| (c) Machine Shop Practice | 500-00 | 200-00 |

Apply on forms available at office (Rs. 3/-) and send your application to Director, Jaffna College Technical Institute, Vaddukoddai before CLOSING DATE 16-4-1984. 1408

# "பாதுகாப்பு எல்லைகளை அத்துமீறினால் இரசாயன ஆயுதம் பாவிக்கப்படும்!"

## ஈராக் மேஜர் ஜெனரல் எச்சரிக்கை

பக்தாத், மார்ச் 18 ஹுக் பிரவேசித்தால் இரசாயன "ஈராக்கின் பாதுகாப்பு எல்லைகளை மீறி ஈரான் ஈராக்கி ஆயுதங்கள் பாவிக்கப்படும்" என்று எச்சரிக்கை யொன்றை ஈராக்கிய மேஜர் ஜெனரல் ஒருவர் விடுத்துள்ளார்.

மேஜர் ஜெனரல் ரஷீட் என்பவரே இந்த எச்சரிக்கையை விடுத்தவராவார். இவர் ஈராக்கின் தென்பகுதிப்படைகளின் பொறுப்பதிகாரியாகவுள்ளார்.

ஈராக் இதுவரை இரசாயன ஆயுதங்கள் எதனையும் உபயோகிக்கவில்லையென்றும் இந்த மேஜர் ஜெனரல் கூறியுள்ளார். ஈராக்போட்டிருக்கும் பாதுகாப்பு எல்லைகளை ஈரான் அத்துமீறி வரும்பட்சத்திலேயே ஈராக் இரசாயன ஆயுதங்களை உபயோகிக்கும் என அவர் கூறியுள்ளார்.

இதேவேளை ஈராக், ஈரான் யுத்தம் பஸ்ராவின் கிழக்குப் பகுதியில் மோசமடைந்துள்ளது. ஆயிரக்கணக்கான ஈரானியர்களைக் கொன்றுள்ளதாக ஈராக் கூறிவருகின்றது.

ஈரான் தரப்பில் ஐந்நூறு ஈராக் வீரர்கள் காயப்படுத்தப்பட்டுள்ளார்கள், அல்லது கொல்லப்பட்டுள்ளார்கள் என்று கூறப்பட்டது. (கி)

## அரசாங்க அதிபருக்கு பிரிவுபசார வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா இடமாற்றம் பெற்றுச்செல்வதையடுத்து யாழ்ப்பாணம் தேசிய கூட்டுறவுச் சபை அவருக்கு பிரிவுபசார வைபவமொன்றை நடாத்தவுள்ளது.

இவ்வைபவம் நாளை செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும். யாழ். தேசிய கூட்டுறவுச்சபைத் தலைவர் திரு. சி. சிவமகாராசா, இவ்வைபவத்துக்குத் தலைமைதாங்குவார். யாழ்ப்பாணம் மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் இவ்வைபவத்தில் கலந்துகொள்வார்கள். (இ)

## இந்திய துறைமுகங்களில் வேலை நிறுத்தம்!

### சரக்குகள் ஏற்றி இறக்கும் பணி ஸ்தம்பிதம்

புதுடில்லி, மார்ச் 18

இந்தியாவின் சகலதுறைமுகங்களிலும் ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்துவருகின்றனர். இதனால் துறைமுகங்களில் சரக்குகளை ஏற்றி இறக்கும் பணிகள் உட்பட பல வேலைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

இப்பாரதூரமான வேலைநிறுத்தத்தையடுத்து துறைமுக வேலைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளபோதிலும் அசம்பாவிதங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

பம்பாய் துறைமுகம் வெறிச்சோடிக்காணப்படுகின்றது. கல்கத்தா துறைமுகத்தில் நாற்பது கப்பல்கள் நங்கூரமிடப்பட்டுள்ளன. ஆனால் இவற்றில் பண்டங்களை ஏற்றவோ, இறக்கவோ முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

சென்னையில் ஒரு பயணிகள் கப்பலும், 10 சரக்குக் கப்பல்களும் கடலில் வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

கொச்சி, விசாகப்பட்டினம் உட்பட நாட்டின் பல பிரதான துறைமுகங்களிலும் வேலைநிறுத்தத்தால் சகல பணிகளும் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

அரசாங்கம் இவ்வேலைநிறுத்தத்தை சட்டவிரோதமானதென அறிவித்துள்ளது. அத்தியாவசிய பண்டங்களை ஏற்றி இறக்கும் பணிகளுக்கு கடற்படையினர் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். (கி)

## பொதுநல நாடுகள் தினம்

(கரவெட்டி)

யூல்வெட்டி இந்து தமிழ் கலவன் பாடசாலையில் அண்மையில் பொதுநல நாடுகள் தினம் சர்வதேச மகளிர்தினம் என்பன கொண்டாடப்பட்டன. பாடசாலை அதிபர் திரு. சி. கணேசமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்த விழாக்களில் சிறப்புரைகளும் இடம்பெற்றன.

## புராணபடனம் பூர்த்தி

(நீர்வேலி)

நீர்வேலி வாய்க்கால்தரவைப் பிள்ளையார் கோவிலில் நேற்று சனிக்கிழமை பங்குனி உத்தரத் திருவிழாவையொட்டி விசேஷ அபிஷேகங்கள் நடைபெற்றன. கடந்த மூன்று மாதகாலமாக நடைபெற்றுவந்த திருத்தொண்டர் புராணப் படிப்பும் நேற்றுப் பூர்த்தி பெற்றது. நண்பகல் அன்னதானம் நடைபெற்றது.

இவ்வாலயத்தின் அபிவிருத்தி திருப்பணிகள் விரைவில் பூர்த்தியாகிக் கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.




ZENITH

பிரகாசமான இயற்கை வர்ணங்களை அளித்து மகிழ்ச்சியை உண்டு பண்ணும் உன்னத டெலிவிஷன்களை அளிப்பது பிலிப்ஸ்

நம்பகரமான நீண்ட ஆயுள்கொண்ட பிலிப்ஸ் வர்ண டெலிவிஷனின் சிறப்பம்சங்கள்

- உள்ளடக்கப்பட்ட வோல்டேஜ் சமநிலைமானி
- உஷ்ண மண்டல பிரதேசங்களுக்கு உகந்த உருவ அமைப்பு
- தன்னியக்க ஒலி, ஒளி கட்டுப்படுத்தும் சுழல் முறுக்கிகள்
- தெளிவான விம்பம்
- சக்தியுள்ள ஒலியுடு விசே. டபிள்கோண் முறை ஒலி அமைப்பு
- VCR, வீடியோ விளையாட்டுக்கள் வீடியோ டிஸ்க் ஆகியவற்றிற்கான இணைப்புகள்

நீங்கள் பிலிப்ஸ் டெலிவிஷனை தேர்ந்தெடுக்கும்போது - நவீன தொழில் நுட்ப வேலைப்பாடுகளுக்கமைய உருவாக்கப்பட்ட சிறந்த டெலிவிஷனை வாங்கிறோம் என்ற பெருமையை அடைவீர்கள்

இலங்கையில் ஏக விநியோகஸ்தர்கள்

HAYLEYS

**ஹேய்லீஸ் லிமிட்டெட்.**

சேவைப்பிரிவு: 25, பொஸ்ரர் ஒழுங்கை, கொழும்பு 10. தொலைபேசி: 91181-9
காட்சியறை: 646, காலி வீதி, கொழும்பு-3. தொலைபேசி: 86958
சுங்கவரி நீக்கப்பட்ட விற்பனை நிலையம், 2, சிமாடி, கொழும்பு-3.

PHILIPS

நாம் பிலிப்ஸ் உடன் இணைந்து சிறந்ததையே வழங்குவோம்

**இலகு தவணையில் செலுத்த ஒழுங்குசெய்யப்படும்**

கலர் TV
14" 287 டாலர் ரூபா 11,400/-
16" 325 டாலர் ரூபா 12,500/-
20" 400 டாலர் ரூபா 15,500/-
26" 550 டாலர் ரூபா 23,500/-

உத்தரவாத காலங்கள்...

கறுப்பு/வெள்ளை TV
12" 90" டாலர் ரூபா 3,095/-
14" 112" டாலர் ரூபா 3,850/-
17" 148" டாலர் ரூபா 5,800/-

ரெலிவிஷன் செற்ஸ்-1 வருடம்

பிலிப்ஸ் VHS வீடியோகஸெற் றெக்கோடர் 420 டாலர் 'TC'

காட்சிக் குழல்-3 வருடங்கள்

### மணிவாக்கு

பிரபுத்துவத்திலும் பார்க்கத் திறமையுடையதான நாம் முதலாளித்துவம் செழிப்படைந்தது. ஆனால் அதுவும் அருகிப் போனது சோஷலிஸம் அதனை முறிபடிக்கவல்லதென்பது மட்டுமல்ல; உண்மையில் முதலாளித்துவம் தன்னைத்தானே கொல்லும் வினையெனலாம்.
—ஜே. பி. எஸ் ஹல்டேன்

# நமது நோக்கு

## வெளிநாட்டுச்ச(க்)திகள்?

'போதை வஸ்துக் களைப் பயன்படுத்தி, இனப் பூசல்களை ஏற்படுத்தி, இந்த நாட்டை அழித்தொழிக்க சில வெளிநாட்டுச் சக்திகள் திட்டமிட்டுள்ளன. ஜூலை கலவரங்கள் இந்தப்போதை வஸ்துக்களை உட்கொண்ட வேகத்தில் நடாத்தப்பட்ட வெறியாட்டமென்பதற்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளன" என்று பிரதமர் பிரேமதாசா புதிய தகவல் ஒன்றை வெளியிட்டிருக்கிறார்.

இது ஒரு பாரதூரமான கண்டுபிடிப்பெனக் கொள்ளலாம். அதேசமயம் அந்த உண்மை உருவெடுத்து நிரூபிக்கப் பிறக்க உதவாது போனால் 'புஸ்'வாணமாகலாம்.

இதுதொடர்பாக இன்னொரு பிரமுகர் அரசியல் சார்பற்றவரென்று கருதப்படும் பேராசிரியர் டபிள்யூ எஸ். கருணாரத்தின வெளியிட்டிருக்கும் கருத்து அவருடைய சிந்தனைக்குரியது.

"இன்றைய கட்டுப்பாடற்ற பொருளாதாரக் கொள்கை, எங்கள் முன்னோரளித்த அருஞ்செல்வம், பண்பு, ஒழுக்கவியல் அனைத்தையும் அழித்துவிடுகிறது. இதனைக் கைவிடாதொழிய இன்று பொதுமக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் திரவழியில்லை."

இவ்விருவருடையகளும் வேறுபட்ட கருத்துக்களில் அமைந்தபோதும், நாடு மிகப்பலவீனமான நிலையில் இருப்பதை வெளிப்படுத்துவதில் ஒற்றுமை கொண்டுள்ளன.

நாட்டின் பிரதமர் இந்த நாட்டுக்கு எதிராக வேற்று நாடு கள்) சதிசெய்கின்றன என்று ஆதாரபூர்வமாகக் கூறுவது மிகப்பயங்கரமான செய்தி, இது உண்மையாயின் இதனை முறியடிக்க வேண்டிய அரசியல் தந்திரம், தேவைஏற்படின் நேச நாடுகளின் ராணுவ உதவி மிகஅவசியமாகும். வெளிநாட்டு அமைச்சர் ஜெனிவா சென்று இங்குள்ள நிலைமையை நேரில் விளக்கிய போது, கடந்த கலவரம் ஒரு எதிர்பாராத தனிப்பட்ட சம்பவம் என்ற அரசின் அறிக்கையைத் தழுவி நிலைமையைச் சாதகமாக்கியிருந்தார்; வேறு அமைச்சர்கள் வேறுவிதமாகப் பேசிக் கொள்கின்றனர்.

பிரதமர் கூறும் காரணம் மிகப்பிந்திய தகவல் போலத் தெரிகிறது. இருப்பினும் நாட்டைப்பரிபாலிக்கும் ஆட்சியில் கட்டான பொறுப்பை ஏற்றுக் கொண்ட அமைச்சர்கள் வெவ்வேறு விதமாக முரண்பட்ட கருத்துக்களை ஒரே நேரத்தில் மக்களுக்கு தெரிவிப்பது இன்று சாதாரண வழக்கமாகிவிட்டது. இந்த நிலையில் பயங்கரமர்மங்கள் வெளிவருவது நூதனமல்ல.

போதைவஸ்துக்களால் பயங்கரமர்மங்கள் ஏற்பட்ட அனர்த்தங்களை நன்கறிந்த வர்த்தக, கப்பல்துறை அமைச்சர் லலித் அத்துலத்முதலி இவற்றிற்கும் தாராள இறக்குமதிக் கொள்கைக்கும் எவ்வித தொடர்புமில்லை என்று உறுதியாகப் பதிலளித்துள்ளார். இக்கொள்கையை மக்கிப்படுத்தும் அவசியம் உண்டெனக் கைத்தொழில் அமைச்சர் தர்க்க ரீதியில் விளக்கியிருக்கிறார்.

எங்கள் நாட்டுக்குள் ஹெரோயின், கஞ்சா, அபின் போன்ற மிகபயங்கரமான போதைப்பொருள்கள் உள்ளிட்டு ஊற்றெடுக்க இடம்கொடுத்தமை அரசின் முழுப் பொறுப்பாகும்; இதற்கு ஒருவெளிநாட்டுத் திட்டம், அல்லது சதிதான் காரணமா என்பது சர்வதேச அரசியல் தந்திர வட்டத்தில் அவசரமாக ஆராயப்பட்டு அறியவேண்டியது; அதேசமயம் இங்குவெளிநாடுகள் உள்விடுவதைத் தடுப்பதற்கு இன்றைய திறந்த பொருளாதாரம் உதவுகிறதாவென்பதை நாம் உண்மையில் அறிய வேண்டும்.

வெளிநாட்டு சக்திகள் என்னவானாலும், நாட்டுமக்களின் ஒழுக்கபண்பு குன்றிய இடத்திலேயே இத்திய வழக்கம் இவ்வளவுதூரம் மிக இலகுவில் பரவமுடியும். எனவே பேராசிரியர் கருணாரத்தினவின் கண்டனம் மிகப்பலமுடையது.

கொழும்பு பிரபல கல்லூரி மாணவர்கள் இவற்றில் சிக்குண்டிருப்பதே நாட்டின் இன்றைய தீங்குகளில் மிகப்பெரிதாகும். வடக்கு கிழக்கு நிகழ்ச்சிகள் அரசுக்கு தற்சமயம் தலையிடியைக் கொடுத்தபோதும், நாட்டின் வருங்கால வீரர்களான, இன்றைய மாணவ சமுதாயத்தின் வடித்த முதல்வடி இத்தீங்கில் பலியாவதானால் மீட்சி ஏது? இன்றைய மேல்மட்ட சமுதாயம் இதனைக் கண்டிக்கும் தார்மிக பலமுடையதா?

கல்லூரி அதிகாரிகள், பெற்றோர், பொதுநல அபிமானிகள் எல்லோரும் மௌனம் சாதிப்பதேன்? ஆடிக்கலவரத்தில் பிரபல பௌத்த கல்லூரி மாணவர்கள், தீவிரமான பங்கு கொண்டார்களென்ற அவச்செய்தியை நாம் இலகுவில் நம்பவில்லை. போதை முதற்காரணமல்லவென்பதும் வற்புறுத்தப்பட வேண்டும்.

எனவே இன்று ஆட்சிக்கு மிக அவசியமானது ஒன்றுபட்ட அமைச்சர் குழுக் குரல். பாராளுமன்ற ஆட்சியிலும், அரசியலமைப்பு ஆட்சியிலும் எதிர்க்கட்சி முறையிலும் பெருநம்பிக்கை கொண்ட ஜனாதிபதி தமது தலைமையிலுள்ள அமைச்சர்குழுவை ஒருமுகப் படுத்தவேண்டும். அபிப்பிராயபேதம் இருப்பது சகஜம்; அமைச்சரவைக் கூட்டங்களில் திறந்த விவாதத்தின் மூலம் அது ஒழிக்கப்படவேண்டும். ஒரே கருத்து செயற்படவேண்டும்.


நாட்டின் உண்மைநிலை பற்றி ஒற்றுமைப்பட்ட கருத்து வழங்கப்படவேண்டும்; அதுநியாயமான அளவிற்கு உண்மையானதாகவும் இருக்கவேண்டும். இந்த நாட்டு மக்கள் என்றும் எல்லா மக்களுமே, வேற்று நாட்டுச் சதிகள், சக்திகள், உள்நாட்டுச் சதிகள், சக்திகள் நாட்டை அழிக்கும் திட்டமிருந்தால் அதனை மக்களுக்கு விளக்கி நாட்டைப் பாதுகாப்பதில் முதற்றேவை ஆட்சியின் ஒற்றுமையே என உணரவேண்டும்.

# ஆக்கப்பணிகளில் யாழ். ரோட்டரிக்கழகம்


சர்வதேச சமூகசேவை ஸ்தாபனமான ரோட்டரிக் கழகம் யாழ்ப்பாணத்தில் பல ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபட்டுவருகின்றது.

பொதுச்சேவைகளில் மட்டுமல்லாது பல பிரச்னையான சூழ்நிலைகளிலும் இக்கழகம் தலையிட்டுச் சமூகமான முடிவுகளுக்கு வழிவகுத்துள்ளது. இப்பிரச்னைகளில் இலங்கைக் கடல் பிராந்தியத்தில் அத்து மீறிய தாக்கதான இந்திய மீனவர்களைபல்வேறு சந்தர்ப்பங்களில் காப்பாற்றி இக்கழகம் அவர்களைத் தாயகம் அனுப்பி வைத்தமை குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

நான்கு தடவைகள் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர் ஆனால் ஆதரவரான அம்மீனவர்களுக்கு ரோட்டரிக்கழகம் சட்டரீதியாக ஆதரவளித்து அவர்களை விடுதலைசெய்து அவர்களது மீன்பிடிக் கலங்களையும் மீட்டுக்கொடுத்துள்ளது.



ரோட்டரி ஆளுநர்
பி. எம் கதிரேசன்



யாழ். ரோட்டரிக்கழகதலைவர்
எஸ். சத்தியமூர்த்தி

யாழ்ப்பாணத்தில் தீயணைப்புப்படையொன்றை அமைக்க வேண்டுமென்பதிலும் யாழ் ரோட்டரிக்கழகம் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளது.

இக்கழகத்தின் தலைவரான திரு. எஸ். சத்தியமூர்த்தி தாம் இவ்விடயம்பற்றிய வலருடன் ஆராய்ந்துவருவதாகக் குறிப்பிட்டுள்ளார்

இரத்ததானம் வழங்கச்செய்வதனையும் யாழ். ரோட்டரிக்கழகம் ஊக்குவித்துவருகின்றது. இதுகுறித்து பரந்தளவில் பிரசாரங்களையும் இக்கழகம் முடுக்கிவிட்டுள்ளது

இதுவரை யாழ் மாவட்டத்தில் பல பாடசாலைகள், பொதுநிறுவனங்கள் என்பன இக்கழகத்தின் சேவைகளைப் பெற்றுள்ளன அகதிகளாகக் கலவரத்தின்போது பாதிக்கப்பட்டுவந்த மாணவர்களுக்கு உடுபுடவைகள், பயிற்சிப்புத்தகங்கள் என்பனவற்றை இக்கழகம் வழங்கி உதவிவருகின்றது.

சாவகச்சேரி மகளிர் வித்தியாலயத்திற்கு யாழ். ரோட்டரிக்கழகம் ஏழாயிரத்து ஐந்நூறு ரூபா பெறுமதியான கதிரைகளையும் வழங்கவுள்ளது குறிப்பிடத்தக்கது.

ரோட்டரிக்கழகத்தின் தென்னிந்திய ஆளுநரான திரு பி எம் கதிரேசன் தற்போது யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார். இவர் இங்கு பலபிரமுகர்களைச் சந்தித்து உரையாடவுள்ளார். யாழ் ரோட்டரிக்கழகம் தென்னிந்திய ஆளுநர் பி எம் கதிரேசனின் யாழ் வருகையை முன்னிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றது.

(5-ம் பக்கம் பார்க்க)

# மக்கள் கருத்து

## யாழ்ப்பாணக் கல்லூரி நூல் விமர்சனம்

மேற்படி விடயம் பற்றி ஒரு கடிதத்தை தங்கள் பத்திரிகையில் இம்மாதம் 14ம் திகதி படித்தேன். அதில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இலட்சினை பற்றி- விசேடமாக அதில் காணப்படும் குத்துவிளக்குப் பற்றி, ஒரு குறிப்புப் பார்த்தேன். அறிவு ஒளிமயமானது. அதை குறிப்பதற்கே அறிவைப் பரப்பும் பல்கலைக்கழக இலட்சினைக்கு குத்துவிளக்கு தெரியப்பட்டது. மேலும் குத்துவிளக்குத் தமிழரால் மதபேதமின்றி ஒரு மங்கலப் பொருளாக கொள்ளப்படுகிறது ஆகையால் குத்துவிளக்கை இலட்சினையில் சேர்த்ததில் ஒரு குறையுமில்லை.

நந்தி யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ் அரசின் இலட்சினையாகும். ஆகவே இது யாழ்ப்பாணத் தமிழரின் பாரம்பரியத்தை எடுத்துக் காட்டுவதாகக் கொள்ள வேண்டும்.

மேற்கூறியவற்றால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இலட்சினை மிகவும் பொருத்தமானதே.

ச, அம்பிகைபாகன்
மல்லாகம்.

## கவிஞர் ஈழவாணனுக்கு அஞ்சலி

(மானிப்பாய்)

திரு ஈழவாணன் கவிதைத் துறையில் நன்கு முன்னேறி வந்த ஒரு கவிஞர் ஆவர். அவ்வப்போது சிறந்த கவிதைகளை எழுதிவந்தார். கவிதைகளை எழுதியதோடு அல்லாமல் தனது கவிதைகளைத் தொகுத்து "அக்கினிப்பூக்கள்" என்ற பெயரில் வெளியிட்டார். இச்சேவை தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாக இருந்தது. ஈழவாணனின் திடீர் மறைவு சிறப்பாக அவருடன் பழகியவர்களுக்கும் தமிழ் கவிதை இலக்கியத் துறைக்கும் பெரும்நஷ்டத்தை ஏற்படுத்திவிட்டிருக்கிறது''

பிரபல கவிஞர் 'ஈழவாண'னின் இறுதி அஞ்சலியில் இரங்கல்உரை நிகழ்த்திய யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. எம் ஏ. நுஃமான் மேற்கண்டவாறு எடுத்துக் கூறினார்.

திரு. என். சிவபாதம் தமது அஞ்சலியில் கூறியதாவது:

"பழக இனியவராகவும், பண்பாளராகவும் விளங்கிய ஈழவாணன் ஈழத்துக் கவிதை இலக்கியத்துக்கு கணிசமான பங்கினை அளித்துள்ளார். "ஷாக்கோ" என்ற புனைபெயரில் பல மனோதத்துவக் கட்டுரைகளை எழுதி வாசகர்களைச் சிந்திக்கத் தூண்டியவர் ஈழவாணன்.

"வானொலி நிகழ்ச்சிகளில்

(5-ம் பக்கம் பார்க்க)



# தபக்கால நற்சிந்தனை

## நமது ஆன்ம ஈடேற்றம்....

"ஒருவன் உலகத்தையெல்லாம் தனதாக்கிக்கொண்டாலும் தன் ஆன்மாவை இழந்து விடுவானாகில், அவனுக்கு என்ன பலன்" என்கிறார் கிறிஸ்துநாதர்.

மத்தேயு (16 : 26)

பிறவிடயங்கள் அனைத்தையும்விட நம் ஒவ்வொருவரின் ஆன்மாவை இரட்சிப்பதுதான் முக்கிய கடமையாகும். நமது நித்திய ஈடேற்றத்தை ஒருக்காலும் ஆபத்துக்குட்படுத்தல் ஆகாது. எனவே நாம் நித்தியபேரின்பத்தை அடைவதற்கான வாய்ப்புகளை பாழாக்கும்படி எம் மனதை இவ்வுலக இன்பங்களில் செலுத்துதல் கூடாது. நாம் விண்ணகப்பேறு அடைவதைக் காப்பதற்கு நமது சொத்து சுதந்தரங்களையும், நம் மதிப்பையும், சுதந்திரத்தையும், உயிரையுங்கூட இழக்கத் தயாராயிருத்தல்வேண்டும். எனவே இக்காலத்திலே எம் ஐம்புலன்களையும் அடக்கி எம்மை ஒறுத்துவாழப் பயிலவேண்டும் சரீர காரியங்களில் கூடிய கவனம் கொள்வதைவிட எமது ஆன்ம காரியங்களில் முக்கிய கவனம் கொண்டு இப்புனிதமான தவகாலத்திலே எம்மை பரிசுத்தப்படுத்தி முடிவில்லாத பேரின்பத்தை அடைய முயற்சிசெய்வோமாக.

— செல்வி பரமா.

# 3பிள்ளைகளின் தாயின் சடலம் எலும்புக்கூடாககண்டுபிடிப்பு

(மருதங்கேணி)

ஒரு மாதத்திற்கு முன்னர் கடும் மழையின்போது வீட்டிலிருந்து காணாமல்போன பெண்ணின் சடலத்தை எலும்புக்கூடு ஆன நிலையில் மழை வெள்ளத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

அவர் அருகாமையில் இட்டத் துணிகளும், அவர் இடக்காலில் இட்டிருந்த ஒரு அடையாளமுமே அவரை இனம் காட்டியது.

பாரதி வடக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த 8 பிள்ளைகளின் தாயான, கந்தையா பொன்னம்மா (வயது 65) என்பவரின் சடலமே எலும்புக்கூடான நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவர் கடும்மழை பெய்த சமயம், சுமார் ஒரு மாதத்திற்கு முன்னர் காணாமல் போனார். வீட்டார் தேடியும் பிடிக்க முடியவில்லை. பொலிஸில், கிராமசேவையாளரிடம் புகார் செய்தனர்.

இடதுகால் அடையாளம் தவிர வேறு உடலில் தசையே கிடையாத நிலையில் எலும்புக்கூடாக சடலம் காட்சியளித்தது.

இறந்தவரின் கணவர் வே. கணபதிப்பிள்ளை, மகன் கந்தையா, கிராமசேவையாளர் திரு கணபதிப்பிள்ளை ஆகியோர் அடையாளம் கண்டு கொண்டனர்.

சாவகச்சேரி திடீர் மரண விசாரணை அதிகாரி என். தர்மேந்திரன் மரண விசாரணை நடத்தினார். விபத்து மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

(சு)

## பணிவோடும் பண்போடும் பழகியவர்

1936ம் ஆண்டு ஜூலை 7ம் திகதி பிறந்து, யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் கண்காணிப்பாளர் பணிமனையில் கணக்காளராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த திரு. கந்தையா தம்பிஐயா தனது வாழ்க்கையின் முக்கிய கட்டத்தில், புகழ்மிக்க சேவையில் பூத்துக் குலுங்கும் வேளையில், பெப்ரவரி மாதம் 20ம் திகதி திடீரென இறைவனடி எய்தியமை, அவரது கிராமமாகிய தெல்லிப்பளையில் ஒரு சோக இருள்படரச் செய்ததுடன், அவரது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் எல்லோரையும் கண்டு கலங்க வைக்க ஆற்றமுடியாத துயரில் ஆழ்த்தியுள்ளது.

தம்பிஐயா தனது கல்வியை மாவிட்டபுரம் மெமோறியல் ஆங்கிலக் கல்விக்கூடத்தில் பயின்றார். 1955ம் ஆண்டு அரசபொது எழுதுநர் சேவையில் சேர்ந்தார். அவர் மாத்தளை காணிப் பதிவகத்தில் கடமையாற்றினார். அவ்வேளை அவரது பிரயாசை மிடா முயற்சி, திறமை காரணமாகவும் உயர் ரகமான அதிகப்படியான அளவு வேலைசெய்த திறமைக்காகவும் அத்திணைக்களத்தின் பரிசு நிதியத்திலிருந்து அடையாளப் பரிசு ஒன்றையும் பெற்றுக்கொண்டார். பின்னர் கணக்காளர் சேவைக்கான போட்டிப் பரீட்சையில் தேறிகணக்காளராகப் பதவி யேற்றுக் கொண்டார்.

1978ம் ஆண்டு ஜனவரியில் யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் கண்காணிப்பாளர் பணிமனையில் கணக்காளராகப் பதவியேற்றார். அவரது சிறப்புமிக்க அரசசேவையில் புகழ்மிக்க காலகட்டமாகவும், கடைசிக் கட்டமாகவும் இந்தக் குறுகிய கால சேவை அமைந்துவிட்டது. புகையிரத நிலையத்திலிருந்து மருத்துவ நிறுவனங்களுக்கு களஞ்சியப் பொருட்களை தனியார் ஒப்பந்தக்காரரின் வாகனத்தில் ஏற்றி இறக்கும் முறையை நீக்கி, திணைக்கள வாகனத்தில் ஏற்றி இறக்கும் மாற்றுத் திட்டத்தை அவர் ஆலோசனைப்படி சுகாதாரத் திணைக்களம் புகுத்தியமை அவர் இப்பொறுப்பாகத்தில் புரிந்த ஓர் சாதனையாகும். இதனால் அரசுக்கு கணிசமான பணம் மீதப்படுத்தப்பட்டுள்ளது. எவருக்கும் வஞ்சனையோ வெறுப்போ இன்றி, சுகாதார கண்காணிப்பாளர் முதல் சுகாதார சுத்திகரிப்பு தொழிலாளி வரை எல்லோருடனும் பணிவோடும், பண்போடும் பழகிய நற்குணங்களால் திரு. தம்பிஐயா அவர்கள் தமது அரசசேவையின் இறுதிக்கட்டத்தில் நல்லுறவை ஏற்படுத்திக்கொண்டார். தெல்லிப்பளையில் நடைபெற்ற அவரது மரணச்சடங்கின்போது, இந்த நல்லெண்ணமும் செல்வாக்கும் துல்லியமாகத் தெரிந்தது.

(7-ம் பக்கம் பார்க்க)

## "காலத்தை பொதுப்பணிக்கு செலவிடுவோம்"

(சாவகச்சேரி)

"எங்களுடைய காலத்தைச் சொந்தங்களுக்குச் செலவிடுவதைவிட, பொதுப்பணிக்குச் செலவிடவேண்டும் ஆத்மீக ஊதியம் தேட இதுவே சிறந்த மார்க்கமாகும். எமது அறநிலையங்கள் வளருவதற்கு தியாக சிந்தை எம் மத்தியில் நன்கு வளரவேண்டும். ஆதரவற்ற சிறார்களுக்கு உதவுவது ஆண்டவனுக்கு ஆற்றும் பணியாகும்"

இவ்வாறு, கைதடி சைவ சிறுவர் இல்லத்தின் ஒன்பதாவது கொடிநாள் வைபவத்தில் போது ஆசியுரை வழங்கிய பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தெரிவித்தார்.

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையைச் சேர்ந்த திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் தலைமையில் நடைபெற்ற கொடிதின வைபவவிழாவில், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மேலும் பேசுகையில் "அறம் செயயும் நாட்கள் புண்ணியத்தை ஈட்டும் நாட்களாகும். பணிசெய்யும் போது பணிவுடன் செய்யும் பணியினால்தான் நல்ல பலனை எதிர்பார்க்க முடியும்" என்றார்.

இவ்வைபவத்தில் வவுனியா அரசாங்க அதிபர் திரு.கே சி. லோகேஸ்வரன், தொழில் அதிபர் திரு க. கனகராசா, சட்டத்தரணி செ. அம்பிகைபாலன், ஆயுர்வேத டாக்டர் மே. பிலிப்ஸ் உட்பட பலர் கருத்துரைகள் வழங்கிச் சிறப்பித்தனர். இல்லத்தின் நிர்வாகச் செயலாளர் திரு ஆறுமுகம் கந்தையா நன்றி கூறினார்.

## கவிஞர்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தனது கவிதைகளையும் சிறந்த பேச்சுக்களையும் நிகழ்த்தினார்

"இளம்வயதில் அவரது மறைவு மிக்க துயரமானதும் ஈழத்துத் தமிழ் இலக்கியத் துறைக்கு மிக்கதொரு பெரிய இழப்புமானதாகும்"

கலை, இலக்கிய நண்பர்கள் குழு திரு. எஸ். திருச்செல்வம் தமது அஞ்சலியில்; பத்தாண்டுகளுக்கு மேலாக தனது சிறந்த கவிதைகளாலும் கருத்தாளம்மிக்க பேச்சுக்களாலும் நல்லதொரு சமுதாயப்பணி யாற்றிவந்தவர் ஈழவாணன் என்றும் அவரது திடீர்மறைவு தமிழ் கவிதை உலகுக்கு மிக்கதொரு நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளதென்றும் கூறினார்.

# கிளிநொச்சியில் யானைகளை விரட்ட குழு வருகிறது!

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் யானைகளின் வெறியாட்டத்திற்குப் பலர் பலியாகியமையைத் தொடர்ந்து அரசாங்க யானை விரட்டும் குழுவொன்று இங்கு விரைவில் வருகைதரவுள்ளது.

இக்குழு இருவத்தைம் வீரர்கள் வெடிகளைக் கொழுத்தியும் பல்வேறு உபாயங்களைக் கையாண்டும் யானைகளை வனாந்திரக் காட்டுப்பகுதிக்கு துரத்துவார்கள்.

கொக்காவில், முறுகண்டி, இந்துபுரம், கிருஷ்ணபுரம், தொண்டமான்நகர் கனகபுரம், கோணாவில், புதுமுறிப்பு ஆகிய பகுதிகளில் யானைகள் பெரும் அட்டகாசம் விளைவித்து அங்குள்ள மக்களைக் கொன்றும் வீடுகளை நாசம் செய்து பொருட்கள் உடைமைகளைச் சேதமாக்கியும் தமது வெறியாட்டத்தை நடத்திவருகிறது.

இதுவரை யானையின்வெறித்தனத்திற்கு பலியானோர் பதினைந்து பேருக்கு மேலானார். பொருட்சேதமோ பல லட்சம் ரூபாய்களுக்கு மேல்.

யானையால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்க அரசாங்க அதிபர் என். ஜெயநாதன், உதவி அரசாங்க அதிபர்களான கே குணராசா (செங்கையாழியான்) என். அமிர்தலிங்கம் ஆகியோர் முன்வந்து எடுத்த நடவடிக்கையின் பயனாக யானையைக் காட்டுப் பகுதிக்கு விரட்டும் குழுவினர் கிளிநொச்சிக்கு வருகின்றனர்.

இக்குழு கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் தங்கியிருந்து தமது நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள். (உ)

## ரூபவாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 6-00 | நாட்டுவளம் (சிங்களம்) |
| 6-05 | சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்) |
| 6-30 | சிறுவர் நிகழ்ச்சி (சிங்களம்) |
| 6-55 | செய்திகள் (தமிழ்) |
| 7-15 | விளையாட்டுப் பயிற்சி |
| 7-45 | 'பட்டில் ஸ்ரார் கலக்ரிகா' — ஆங்கில சித்திரம் |
| 8-15 | செய்திகள் (சிங்களம்) |
| 8-35 | "பட்டில்ஸ்ரார்..." தொடர்ச்சி |
| 9-05 | விவரணச்சித்திரம் (சிங்களம்) |
| 9-30 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 10-00 | 'சார்லிஸ் ஏஞ்சல்ஸ்' - துப்பறியும் தொடர் (ஆங்கிலம்) |
| 10-30 | உலகச் செய்தித் தலைப்புகள் |
| 10-35 | சார்லிஸ் ஏஞ்சல்ஸ் தொடர்ச்சி |
| 10-55 | நிகழ்ச்சிகள் முடிவு |

## ஆக்கப்பணி...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு பி எம் கதிரேசன் ரோட்டறிக் கழகத்தின் 321வது மாவட்ட ஆளுநராகவும் மதுரை ரோட்டறிக் கழக சிரேஷ்ட உறுப்பினராகவும் உள்ளார்.

தென் இந்தியாவின் பிரபல வழக்கறிஞராக இவர் விளங்குகிறார். தனியார் சட்ட நிறுவனமொன்றை திறமைமிக்க கனிஷ்ட சட்டத்தரணிகளுடன் கூட்டாக இவர் நடத்தி வருகின்றார்.

தொழில் துறையிலும் திரு. பி எம். கதிரேசன் ஆர்வம் மிக்கவர். தோல் பதனிடும் கைத்தொழில் நிறுவனமொன்றின் பங்குதாரராக இவர் இருப்பதுடன் பரந்தளவில் தென்னஞ் செய்கையையும் இவர் மேற்கொள்கின்றார்.

மதுரை ரோட்டறிக் கழகத்தில் கடந்த 22வருடங்களாக ஆளுநர் பி எம் கதிரேசன் அங்கத்தவராக இருந்து இயங்கி வருகின்றார். இக்கழகத்தின் சேவைகளிலும், மற்றும் நடவடிக்கைகளிலும் இவர் நூற்றுக்கு நூறுவீதம் பங்கெடுத்து வருகின்றார்.

ரோட்டறிக்கழகத்தின் சர்வதேச ரீதியிலான மாநாடுகள், கருத்தரங்குகள் என்பவற்றில் திரு கதிரேசன் பங்குகொண்டுள்ளார். பல நாடுகளுக்குவிஜயம் செய்துள்ளார். இக்கழகம் பற்றி கட்டுரைகள், உரைகள் என்பனவற்றையும் இவர் வெளியிட்டுள்ளார்.

ஆளுநர் பி எம் கதிரேசன் ஒரு கர்நாடக சங்கீதப்பிரியர். ஒவியம், புதைபொருளாராய்ச்சி, புராதன வரலாறு ஆகியவற்றில் ஈடுபாடுகொண்டு அதனை பொழுதுபோக்காகக் கொண்டுள்ளார்.

—அனந்த்

## யாருடையது?

மாதகலைச் சேர்ந்த திரு. சின்னப்பொடியன் கணபதி என்பவரின் அடையாள அட்டையை தெல்லிப்பழை வர்த்தகிளாலைச் சேர்ந்த திரு எஸ் ரவிச்சந்திரன் என்பவர் கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார் உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.


108, BROWN ROAD

**84 A/L இரசாயனம்**

ஆசிரியர்: சத்திஸ்

வினுவிடை செவ்வாய் 4-30 p m—6-00 p. m

ஆரம்பம் 20-3-84

அசேதன இரசாயனம் ஆரம்பம் 19-3-84

திங்கள், வியாழன் 4-00 p m — 5 00 p m

(1461)


## அந்தியேட்டிக்கிரியை அழைப்பு

வெ. தேவசிகாமணி

(வல்வெட்டித்துறை)

| புவியில் தோற்றம்: | இறைவனடிக்கு ஏற்றம்: |
|---|---|
| 24-11-29 | 19-2-84 |

எங்கள் குடும்பதெய்வம் போன்ற தலைவரும், ஈருடல் ஓர்உயிர் என்ற வாழ்வை தனது மனைவிக்கு வழங்கிய ஓர் உன்னதமானவரும், கண்ணை இமைகாப்பதற்கொப்பாக தன்பிள்ளைகளை பாதுகாத்து வளர்த்தவரும், தன்னுயிர்போல் மருமக்களை நேசித்த மாமனாரும், தன்பெயர்காக்க பேரப்பிள்ளைகளைக்கொண்ட பெருமைபெற்ற தாத்தாவும், உறவினர்களுக்கு அன்பிலும் அறிவிலும் உயர்விளக்காக விளங்கிய உத்தமரும், தபாலதிபர் உத்தியோகத்தில் சிறந்த நிர்வாகி என்ற புகழைப்பெற்றவரும், கப்பலில் தொலைத் தொடர்பு அதிகாரியாக திகழ்ந்தவருமான திரு. வெங்கடாசலம் தேவசிகாமணி அவர்களின் அந்தியேட்டிக்கிரியை அன்னாரின் இல்லத்தில் செவ்வாய்க்கிழமை அதிகாலை [20-3-84] நடைபெறும். இவ்வழைப்பை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்று கிரியைகளிலும் மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

திருமதி பூ. தேவசிகாமணி

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ரூபவாசம், வல்வெட்டித்துறை. 1465


HOME FINANCE Ltd.

வாகனங்கள் விற்பனைக்கு உண்டு.

1. ஒரு L 300 டெலிகா – 6சீற்றர் 1400 C C டிலிவரி வான் பெற்றோல் 1980-ம் ஆண்டு மொடல்
2. நிஸன் கரவல் டீசல் — 6 சீற்றர் 1980-ம் ஆண்டு மொடல்

தேவையானவர்களுக்கு கடனுதவி வழங்கப்படும். விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

ஹோம் பினான்ஸ் லிமிட்டெட்,

82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 24310

12 அகதிகள் குடும்பங்களை

# தேவிபுரத்தில் குடியேற்ற யாழ். லயன்ஸ்கழகம் ஏற்பாடு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக்குருநகர் அகதிகள் முகாமில் தற்போதுள்ள 42 குடும்பங்களில் 12 குடும்பங்களை தேவிபுரத்தில் யாழ். லயன்ஸ் கழகத்தினர் குடியேற்றவிருக்கின்றனர்.

இவர்களுக்கென தேவிபுரத்தில் 50,000 ரூபாவிற்கு 25 ஏக்கர் தனியார் காணி வாங்கப்பட்டுள்ளது.

யாழ் லயன்ஸ் கழக முதல் உபதலைவர் திரு. எஸ். அற்புதானந்தன் மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

திரு. அற்புதானந்தன் மேலும் கூறியதாவது: 'அகதிகள் புனர்வாழ்வுக்காக யாழ். லயன்ஸ் கழகத்தினர், இதுவரை 1,37,000 ரூபா செலவு செய்துள்ளனர். 12 குடும்பங்களை தேவிபுரத்தில் குடியேற்றுவதற்காக 70,500 ரூபா செலவிடப்பட்டுள்ளது.

'அகதி முகாமை விட்டுச் சென்ற மற்றும் குடும்பங்களுக்கு நிவாரணமாக யாழ் லயன்ஸ் கழகத்தினர் 1000 ரூபா முதல் 7000 ரூபாவரை வழங்கியுள்ளனர். இன்னும் 30 நடுத்தர வகுப்பைச் சேர்ந்த குடும்பங்கள் அகதிமுகாமில் இருக்கின்றனர். இவர்களில் சிலர் வேலை பார்த்து வருகிறார்கள். இவர்களின் பிள்ளைகள் யாழ்ப்பாணப் பாடசாலைகளில் படிக்கின்றனர்.

'ஒவ்வொரு குடும்பத்தினரும், தாங்களாகவே சமைத்துக் கொள்கின்றனர். இவர்களுக்குத் தேவையான அரிசி, சாமகதி வகைகள் வழங்கப்படுகிறது.

'தேவிபுரத்தில் குடியேறவிருக்கும் 12 குடும்பங்களுக்கு தற்காலிக குடிசைகள் அமைத்துக் கொடுக்கவிருக்கிறோம். 6 மாதகாலத்திற்கு இவர்களை யாழ். லயன்ஸ் கழகமே பராமரித்து வரும். அதன்பின் அவர்கள் அவர்களின் நிலங்களில் விவசாயம் செய்து வருமானத்தை தேடிக்கொள்வார்கள்.

முகாமில் இருந்த இந்தியப் பிரஜா உரிமை பெற்றவர்கள் இந்தியாவிற்குச் சென்று விட்டார்கள். மற்றவர்களில் இலங்கைப் பிரஜாஉரிமை பெற்றவர்களும், பெறாதவர்களும் இருக்கிறார்கள். (ஈ)

உதவிவைத்திய அதிகாரிகள் பயிற்சி:

# 40 பேருக்கு வசதி; 17 பேர் மட்டுமே தெரிவு

## தாதிகள் பயிற்சிக்கு எவருமில்லை

[ஏ. வி. மாணிக்கம்]

உதவி வைத்திய அதிகாரிகள் பயிற்சிக்கு 40 பேருக்கு யாழ் மாவட்டத்தில் (கிளிநொச்சி உட்பட) வசதி இருந்தும் 17 பேர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் தாதிகள் பயிற்சிக்கும் இலங்கையில் 5 வீதமானோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் இதில் தமிழர் எவரும் இடம்பெறவில்லை என்றும் தெரியவருகிறது.

உதவிவைத்திய அதிகாரிகள் பயிற்சி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நடைபெற்றுவருவது வழக்கம்.

இதற்கு 83ம் ஆண்டு இறுதியில் யாழ் மாவட்டத்திலுள்ள தொகுதிகளில் தலா மூன்று உதவி வைத்திய அதிகாரிகள் அத்தொகுதி எம். பிக்கள் மூலம் சிபார்சுசெய்யப்பட வேண்டும். இப் பயிற்சி ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ளது. ஆனால் ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம், நல்லூர், வட்டுக்கோட்டை, மானிப்பாய், சாவகச்சேரி, கிளிநொச்சி ஆகிய தொகுதிகளில் இருந்து உதவிவைத்திய அதிகாரிகளுக்கான நேர்முகப்பரீட்சைக்கு எவரும் அழைக்கப்படவில்லையாம்!

உடுப்பிட்டி, பருத்தித்துறை, கோப்பாய், காங்கேசன்துறை ஆகிய தொகுதிகளிலிருந்தே குறிப்பிட்ட 17 உதவி வைத்திய அதிகாரிகளும் அழைக்கப்பட்டிருந்ததாகச் சொல்லப்படுகிறது.

கொழும்பில் உள்ள சுகாதாரசேவைகள் அத்தியட்சகர் அலுவலகத்தில் கடந்த பெப்ரவரியில் மேற்படி பயிற்சிக்கான நேர்முகப்பரீட்சை நடந்தது.

இப் பயிற்சிக்கு தமிழ் தாதிகள் எவரும் எடுபடாதது குறித்து கவலை தெரிவித்து அரசாங்க பொதுத் தாதியர் சங்கம் சுகாதாரஅமைச்சருக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

உதவி வைத்திய அதிகாரிகள் பயிற்சிக்கு. 83ம் ஆண்டில் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த முன்னாள் எம். பிக்கள் எவரும் யாரையும் சிபார்சு செய்யவில்லை என்பதை த. வி. கூட்டணி நிர்வாகச்செயலாளரும், முன்னாள் கோப்பாய் எம். பியுமான திரு. ஆ. மு. ஆலாலசுந்தரம் தெரிவித்துள்ளார். (மா)

# இன்றைய பலன்

பங்குனி மாதம் 6-ம் திகதி

(19—3—84)

திங்கட்கிழமை

மேடம்: மனக்கோட்டை கட்டுவீர்கள். எதிர்பார்த்ததில் ஏமாற்றம் விளையும். அன்புச் சகோதரத்தின் உடல் நலம் பாதிக்கப்படலாம். அபாயகரமான காரியங்களைத் தவிர்க்கவும்.

இடபம்: சுற்றுலாவில் உங்கள் செல்வாக்குவளரும். கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவதில் அதிக கவனம் செலுத்துவீர்கள். குடும்பத்தில் பிணக்குகள் பலமடையும். சிலருக்கு அதிர்ஷ்டலாபமும் கிடைக்கலாம்.

மிதுனம்: அன்னியர்கள் சகவாசம் சங்கடத்தில் மாட்டிவைக்கும். அவசர முடிவின் மூலம் சில துன்பங்கள் விளையலாம். எதிரிகளின் மூலம் சூழ்ச்சிகள் உருவாகலாம். மனநிம்மதியைக் குறைக்கும் தொழிலும் தடைகள் உண்டு.

கடகம்: தெய்வநம்பிக்கையில் அதிக ஆர்வம் பிறக்கும். புண்ணிய ஸ்தல யாத்திரை பொன்று மேற்கொள்ளப்படலாம். உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் தென்படுகிறது. உற்சாகமான தினம்.

சிம்மம்: எதிர்பார்த்த பொருள் வரவுக்கும் இடமுண்டு. பூமியால் லாபம் கிடைக்கும். புத்திரவழியாலும் நன்மையுண்டு.

கன்னி: பகைமூட்டம் தோன்றும், பதட்டம் உடன் சேரும். பிழையான போக்கினாலே மனதும் பாழாய்ப் போகும்.

துலாம்: குடும்ப வாழ்க்கை குதூகலம் நிரம்பியதாக இருக்கும். காதலர்களாயின் இன்று கற்கண்டுபோல் இனிக்கும். பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவதற்கு இடமுண்டு. தித்திப்பான தினம்.

விருச்சிகம்: நண்பர்களே உங்கள் முன்னேற்றத்திற்கு தடைக்கல்லாக அமைவார்கள். மொட்டைக் கடிதமொன்று சிறிது பரபரப்பை ஏற்படுத்தும். தொழில்துறையில் நஷ்டம் ஏற்படலாம்.

தனுசு: பெரியவர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும் தெய்வத்தின் அருளும் வேண்டும்.

மகரம்: கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும். எதையும் சிறப்புடன் செய்வதற்கு விரும்புவீர்கள். ஓவியர்கள் வாழ்க்கையில் ஒளி கிடைக்கும். சிலருக்கு இடமாற்றமும் ஏற்படலாம். கலைஞர்களுக்கு நல்லதினம்.

கும்பம்: பொதுத்துறையில் நாட்டம் செல்லும். மக்களின் ஆதரவு கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்காகும். பெரிய இடத்து தொடர்பு மூலம் புதிய பாதை பிறக்கும்.

மீனம்: பாதையில் பழுதுண்டு பகைவர் காத்திருப்பர். செலவினங்கள் அளவுக்கு மிஞ்சியதாகவே இருக்கும். சிலருக்கு உடல்நலமும் பாதிக்கப்படலாம். உணவு விஷயத்தில் கவனம் வேண்டும்.

சோதிடக்கலாநிதி
திருமலை வே. ரவீந்திரன்

## காணிகள் பதிவு வேலை ஆரம்பம்

(காரைநகர்)

வட்டுக்கோட்டைத் தொகுதியில் இதுவரை பதியப்படாத காணிகளைப் பதிவதற்கான விண்ணப்பங்கள் ஏராளமாக தொல்புரம் கமநலச் சேவை நிலையத்திற்குக் கிடைக்கப் பெற்றுள்ளன. தொல்புரம் கமநலச்சேவை நிலையத்தின் காணிப்பதிவேட்டில் பதிவதற்கான வேலைகள் நடைபெற்றுவருகின்றன.

புதிய காணிக்குரிய உறுதிகள் இக்காணிகளுக்குரிய ஆதாரமான சான்றுகளுடன் கமநலச் சேவை நிலையத்திற்குவரும்படி விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன. இக் காணிப் பதிவு விசாரணையின் போது அவ்வப்பகுதி பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் பெரும்பாக உத்தியோகத்தர், கமநலச்சேவைக்குழு உறுப்பினர்கள் கலந்து கொள்வார்கள்.

## புதிய அதிபர் நியமனம்

[அரியாலை]

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் புதிய அதிபராக திரு. எஸ். வி. ஆறுமுகம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

அரியாலை வாசியான திரு. எஸ். வி. ஆறுமுகம் நாவலப்பிட்டி கதிரேசன் மகாவித்தியாலயத்தில் முன்னர் பல வருடங்களாக அதிபராகப் பணியாற்றினார். (ஈ)


## பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்ஸ்

இடைவிடா வேண்டுகோளின்படி கீழ்க்காணும் வகுப்புகளின் ஆரம்பம் 30-03-1984 வரை பின்போடப்பட்டுள்ளது. கட்டுப்படுத்தப்பட்ட வெற்றிடங்கள்.

விண்ணப்ப கடைசித் திகதி: 28 03-1984

★ மெக்கானிக்கல் என்ஜினியரிங் டிப்புளோமா (Mechanical Engineering Drawing)
★ படம் வரைதல் பயிற்சி (Draftsman Course)
★ கடைச்சல் யந்திரப் பயிற்சி (Lathesman Course)
★ வெல்டிங் - மின் (Welding Arc)
★ மோட்டார் மெக்கானிசம் (Motor Mechanism)
★ ஆங்கில வகுப்புகள் (Spoken English)

விபரங்களுக்கு நேரில் தொடர்புகொள்ளவும்.

பதிவாளர்
பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்ஸ்
59, சென்பற்றிக்ஸ்வீதி, யாழ்ப்பாணம்.

## ஹோம் பினன்ஸ் லிமிட்.

உல்லாச பஸ் சேவை

தினசரி மாலை 7-00 யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு
தினசரி மாலை 7-45 கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு

கண்ணியமான - பாதுகாப்பான பஸ் சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:

1. ஹோம் பினன்ஸ் லிமிட்.
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 24310
2. நியூ ப்ரசீதா
இல: 337, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி இல: 22480
3. நியூ லங்கா அலுமினியம் இன்டஸ்றீஸ்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23596
4. யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம்
இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 22537, 22370

கொழும்பில் டிக்கட் பெறுமிடங்கள்

1. ஹோம் பினன்ஸ் லிமிட்.
463, காலி வீதி,
கொழும்பு-3
தொலைபேசி: 589190—587680
2. டையமன் ஸ்ரோர்ஸ்
வெள்ளவத்தை.

## தொழிற் பயிற்சிகள்

★ ரெலிவிஷன், வீடியோ டெக் றிப்பியறிங் இரண்டு மாத செய்முறைப்பயிற்சியளிக்கப்படும்.
★ எலக்ரிக்கல் வயறிங் வெல்டிங் இரண்டு மாத வெளியீடுகளில் செய்முறைப்பயிற்சியளிக்கப்படும்.

DIPLOMA IN HOTEL MANAGEMENT
செய்முறைப்பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.
FRENCH, GERMAN ENGLISH பேச, எழுத கற்பிக்கப்படும்.
சனி, ஞாயிறு கிழமை நாட்களிலும் வகுப்பு நடைபெறும்.

ஆரம்பம்: 25—03—84

JAFFNA TECHNICAL INSTITUTE
52/1, கனகரத்தினம் கட்டிடம் (றெயில்வே கடவை அருகாமை)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

வெலிங்டன் 

**வெஸ்லி**
தினசரி 3-30, 6-00
ஜெயசித்ரா
**கல்யாணமாம் கல்யாணம்**

இதுவே கடைசி வாரம்
**ராஜா** (யாழ்நகர்)
தினசரி 10-30, 3-30, 6-00 9-00
கமல் — ஸ்ரீதேவி — நடிக்க
**மீண்டும்கோகிலா**
(சகலருக்கும் உகந்தது)

**ஸ்ரீதர்** (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர் - சரோஜாதேவி
**தாயைக் காத்த தனயன்**

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
கமலஹாசன்-மாதவி
**டிக் டிக் டிக்**
(சகலருக்கும்)

**மனோகரா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15, 4-45, 7-00 p. M.
CLINT EASTWOOD
in
**Branco Billy**
[Coulor]

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9 30
ஜெய்சங்கர்-சாவித்திரி
**ஐக்கம்மா**
21 முதல்
**ஆயிரம் ஜென்மங்கள்**

**சாந்தி** (யாழ் நகர்)
10-30, 2-30, 6-30
17—19 மட்டும்
ஜெய்சங்கர் - ஜெயலலிதா
**வந்தாளே மகராசி**
(புதிய பிரதி)

**வின்ஸர்** (யாழ் நகர்)
தினசரி: 10-30, 2-00, 4-30, 7-00, 9-30 p. m.
Jennifer O Neil in
**SCANNERS**
Their thoughts can kill
Strictly For Adults
(இவ் காட்சிகள் அதிர்ச்சி தரும் மனித இரத்தமும் சம்பந்தப்பட்டவையாக முன்கூட்டியே எச்சரிக்கிறோம்)
From 21-3-84
Charlton Heston in
MOUNTAIN MEN
(Adults Only)

**வீகோ** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரவிந்தர் - ரூபா
**ஒரு தலைராகம்**

**வெலிங்டன்**
தினசரி 10 30, 2-15, 4-30, 7-00, 9-15
Harrison Ford,
Laren Allen in
RAIDERS OF THE LOST ARK
(more suitable for adults)
(Color)
1981-ம் ஆண்டு ஆங்கில இலங்கை திரைப்படவிழா வில் முதல் திரையிடப்பட்டமா தெரிவு செய்யப் பட்டது. See it before it's too late


## பணிவோடும்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)
அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்ட ஒரு மைல் நீள மான இறுதி ஊர்வலத்தில் பிராந்திய நிர்வாக அதிகாரி கள், வைத்திய கலாநிதிகள், தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய சகல உத்தி யோகத்தர்களும் ஊழியர்க ளும் தமது இறுதி மரியாதை யைச் செலுத்திச் சென்றனர். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன்.

பொ. இராஜேந்திரம்


கடைசி இரு தினங்கள்
**நீகல்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 3-30, 6-15
**பயணங்கள் முடிவதில்லை**
அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்
Next:
GALAXY OF TERROR
English Action


## மன்னார் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

### பதவி வெற்றிடம்

பஜாஜ் (ஓட்டோறிக்ஷோ) சாரதி

மேற்படி பதவிக்குக் கன் னார் ப. நோ. கூ. சங்கத்தால் விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன.

விண்ணப்ப படிவங்களையும், மேலதிக விபரங்களையும் ரூ. 5/-ஐ சங்க தலைமைச் செய லகத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு தேதி:- 30-03-84.

பி. ஜே. ராஜசிங்கம்,
பொதுமுகாமையாளர்,
மன்னார் ப. நோ. கூ. சங்கம்,
வைத் வீதி,
மன்னார்.
14-03-84. 1440

## நன்றி நவிலல்

### ஆ. வே. முருகுப்பிள்ளை

11-3-84 அன்று காலமாகிய திரு ஆ. வே. முருகுப்பிள்ளை (பிலாப்பத்தை) அவர்களின் ஈமக்கிரியை களில் 13-3-84-ல் நேரில் கலந்து கொண்டவர்களுக்கும், தவல்கள் மூலம் எமது துக்கத்தில் பங்கு கொண்டவர்களுக்கும் மற்றும் தமது சிரமத்தை பொருட்படுத்தாது வேண்டிய உதவிகளை தந்து உதவி யவர்களுக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கி றோம்.

அவரது பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

குமாரவனவு,
வியாபாரிமூலை, பருத்தித்துறை. 1423

## யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி சாவகச்சேரி

கல்லூரியிலிருந்து விலகியோருக்கான

### தொழில் நுட்பப் பயிற்சி நெறிகள்

ஆரம்பம் 02 - 04 - 84

1. மோட்டார் பொறியியல்
2. வானொலி இலத்திரனியல்

பயில விரும்பும் மாணவர்கள் 23 - 03 - 84-க்கு முன் அதிபருக்கு விண்ணப்பிக்கவும்.

மேற்படி நெறிகளுக்கு விண்ணப்பிப்போருக்கு 26 - 03 - 84 காலை 9-00 மணிக்கு நேர்முகப் பரீட்சை நடைபெறும். நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் போது பாடசாலை விடுகைப் பத்திரம், கல்விச்சான்றி தழ், பிறப்புச் சாட்சிப் பத்திரம் முதலியவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

பூ. வேற்றிவேலு
அதிபர். 1443

## யாழ்/ கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கம்

சங்கத்தில் அங்கத்தவராக சேருவதற்குரிய பரீட் சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண் ணப்பிக்க விரும்புவோர் 1984 பங்குனி 31-ம் திகதிக்கு முன்னர் காரியதரிசிக்கு அனுப்பி வைக்கவும்.

காரியதரிசி,
140/15, 4ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
1457

## யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

### வருடாந்தப் பொதுக் கூட்டம்

மேற்படி வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர் வரும் 30 - 03 - 84 வெள்ளிக்கிழமை மாலை 3-30 மணி யளவில் தலைவர் பூ. வேற்றிவேலு அவர்கள் தலைமை யில் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரையும் சமூகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

14 - 03 - 84 க. சந்திரசேகரம்
செயலாளர்.
1442

## ஆட்கள் உடன் தேவை

தையல் வேலையில் நல்ல அனுபவம் வாய்ந்த பெண்பிள்ளைகள் தேவை. 21-ந் திகதி முதல் 23-ந் திகதிவரை காலை 9 மணி தொடக்கம் பி.ப. 2மணி வரை சான்றுப்பத்திரங்களுடன் நேரில் வரவும்.

### அன்ரனி காமன்ஸ்

"ராஜஸ்டார்"
தபால் நிலைய அருகாமை
கரவெட்டி. 1430

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### அமரர் திரு. வ. அண்ணாமலை

பிரபல மரக்கறி வியாபாரி
(திருநெல்வேலி, மாக்கட்)

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 9-5-1924 | 18-2-1984 |

நெஞ்சைவிட்டகலா உங்கள் இனிய நினைவுகள் எம் இதயங்களில் ஒளிவீசிக் கொண்டிருக்கின்றது. நீங்கள் எங்களுக்கு என்ன என்ன செய்யவேண்டுமோ அத்த னையும் செய்தீர்கள். ஐயா, தங்கள் ஆத்மா சாந்தி யடைய என்றும், இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். உங்கள் அறிவுரையையும் வியாபார திறமையையும் பின்பற்றி நடப்போம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

"பவள இல்லம்"
கூழாவடியேன்,
ஆனைக்கோட்டை. 1456

## 60-வது நாள் நினைவஞ்சலி

### வெற்றிவேலு செல்லத்துரை இலட்சுமிபிள்ளை (ஐயக்கோன்)

(இளைப்பாறிய ஆசிரியை)

பிறப்பு:
11-03-22
இறப்பு:
20-01-84



அன்னாரின் 60வது நினைவு தினமான இன்று 19-03-84 திங்கட்கிழமை எமது குடும்ப வீட்டில் ஆத்ம சாந்திக்காக மௌன பிரார்த்திப்போம். எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்கிலும் அந்தியேட்டிக் கிரியை களிலும் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கிறோம்.

கணவன் - மக்கள்

"இலட்சுமி வாசம்",
உடுவில் - கிழக்கு, சுன்னாகம். 1439

# யானை தாக்கி 5 பேர் பலி!

### வவனியாவில் தொடரும் துயரச் சம்பவங்கள்

(வவனியா)

யானை தாக்கியதினால் வவனியாவில் ஐவர் மரணமானார்கள்

நெடுங்கேணி — தனிக்கல்லு என்ற இடத்தில் மூவரும், கனகராயன்குளம் புதூர்ச் சந்தியில் இரண்டுபேரும் யானை தாக்கி மரணமாகியுள்ளனர் என வவனியா அரசஅதிபருக்கு புகார் கிடைத்துள்ளது.

ஊஞ்சல்கட்டி என்ற இடத்தில் 20 வீடுகள் யானையினால் தரைமட்டம் ஆகியுள்ளன.

மதம்பிடித்த யானை ஒன்று நெடுங்கேணிப்பகுதியில் உலாவி அட்டகாசம் புரிவதாக புகார் கிடைத்துள்ளது.

அட்டகாசம் புரியும் யானையின விரட்ட வவனியா அரசஅதிபர் வனபரிபாலன அதிகாரிகளின் உதவியை கோரியுள்ளார். யானைகளின் அட்டகாசம் வவனியாப்பகுதியில் பலஇடங்களிலும் அதிகரித்துள்ளது.

## நீதிமன்ற விசாரணைக்கு சென்றுவிட்டு வீடு திரும்பிய பெண் தாக்கப்பட்டார்!

[மாவிட்டபுரம்]

நீதிமன்ற வழக்குவிசாரணைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிய பெண்ணைத் தாக்கியதுடன் அவரது கழுத்திலிருந்த 20 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியையும்

### தங்கச்சங்கிலியும் அபகரிப்பு

அபகரித்தாராம் நபர் ஒருவர்.

கழியுரம் கிழக்கைச் சேர்ந்த கந்தையா சரஸ்வதி என்னும் பெண் மேற்படி சம்பவம் தொடர்பாகக் காங்கேசன்துறைப் பொலிஸில் புகார்செய்துள்ளார்.

இப்புகார் குறித்துக் காங்கேசன் துறைப் பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

### அடையாள...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அடையாள அட்டை இல்லாதவர்கள், கைது செய்யப்பட்டு நீண்டநேரம் விசாரணைக்குட்படுத்தப்பட்டு, சந்தேகமானவர்கள் தடுத்து வைக்கப்படுவார்கள் என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (க)

### நிலஉரிமை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தைமுடித்துவைப்பார்.

முன்னாள் உடுப்பிட்டி எம். பி. திரு அ. இராசலிங்கம், சட்டத்தரணி சிவகுருநாதன், சட்டத்தரணி தேவராசா, திரு. குணரத்தினம், திரு. டானியல், திரு. வேலுப்பிள்ளை, திரு. இராசதுரை ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளனர் (மா)

### அகதிகளுக்கு தொழில் வாய்ப்பு

[கிளிநொச்சி]

இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட குருகுலம் சர்வசக்தி அச்சகத்தின் திறப்பு விழா இன்று பிற்பகல் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. என். ஜெயநாதனால் திறந்து வைக்கப்படும். குருகுலத்தில் அமைந்துள்ள இந்த அச்சகத்தில் அகதிகளாக வந்தோரின் பிள்ளைகளுக்கு முதலிடம் வழங்கப்படவிருக்கிறது.

## மரண அறிவித்தல்

### நாகமுத்து சின்னம்மா

அரியாலையைச் சேர்ந்த நாகமுத்து சின்னம்மா காலமானார். இவர் விஜேதா சலூன் உரிமையாளர் சந்திரன், இந்திராவதி, சாந்திமதி, ஜெகதாம்பிகை, மனோன்மணி, இராஜேஸ்வரி (ஜேர்மனி) இந்திரகோமதி (குவைத்) ஆகியோரின் தாயாரும், ரஜனி சலூன் உரிமையாளர் வீரசிங்கம், கந்தையா, செல்லையா, கந்தசாமி, சின்னத்துரை, மகாலிங்கம் ஆகியோரின் மாமியாருமாவார். அன்னாரது இறுதிக்கிரியைகள் கொழும்புத்துறை, இல: 1009, துண்டி வீதியிலுள்ள வீரசிங்கத்தின் இல்லத்திலிருந்து நாளைக்கிரியைக்காக திங்கட்கிழமை (19-3-1984) காலை 8 மணிக்கு துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இதை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம். 1468

## மரண அறிவித்தல்

### திருமதி க. முத்துவேலு

கடந்த வியாழக்கிழமை வவனியாவில் காலமான திருமதி க. முத்துவேலுவின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 10 மணிக்கு நடைபெறும். உற்றார் உறவினர், நண்பர்கள் இத்தகவலை தயவுசெய்து ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

தகவல்:

திருமதி விஜயரத்தினம்.

1467

## ஜூரருக்கு எச்சரிக்கை

[யாழ்ப்பாணம்]

யாழ். மேல் நீதிமன்றம் வராத ஜூரரை "இனிமேல் இப்படி செய்யக்கூடாது" என்று யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி ஜே. ஜி. ஆசிர்வாதம் எச்சரித்தார்.

கடந்த தவணை ஜூரர் நீதிமன்றம் வராததினால் வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது. பொலிசார் இவரை கைதுசெய்து ஆஜர் செய்தனர்.

"ஏன் வரவில்லை? என்று நீதிபதிகேட்டபோது சுகவீனமானதால் வரவில்லை என்றும் டாக்டரிடம் போகமுடியவில்லை" என்றும் தெரிவித்தார்.

"அதுபற்றி ஏன் தந்தியனுப்பவில்லை?", என்று நீதிபதி கேட்டபோது "முதல் தடவையானதால் இப்படி நடந்துவிட்டேன்" என்றார்.

நீதிபதி எச்சரித்து அடுத்த தவணைக்கு வருமாறு தெரிவித்தார். [ச]

## கிரிக்கெட் டெஸ்ட்: நியூ: 198 இலங்கை: 2-133

[கொழும்பு]

நியூஸிலாந்து-இலங்கை அணிகளுக்கிடையே கொழும்பு எஸ். எஸ். ஸி. மைதானத்தில் நடைபெறும் 2வது கிரிக்கெட் டெஸ்டின் 3ம் நாள் ஆட்டத்தில் இலங்கை அணி இரண்டாவது இன்னிங்ஸில் மிகத் திறமையாக விளையாடி 2 விக்கெட் இழப்புக்கு 133 ஓட்டங்களை எடுத்தது.

ரோய் டயஸ் 74, வெத்தமுனி 56 ஓட்டங்களுடனும் ஆடிக் கொண்டிருக்கின்றனர்.

நியூஸிலாந்து முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 198 ஓட்டங்களை எடுத்தது. ரவி ரத்நாயக்கா 5 விக்கெட்டுகளையும், வினோதன் ஜோன் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்கள். இலங்கை முதல் இன்னிங்ஸில் 174 ஓட்டங்களை எடுத்தது. [கு]

## யாழ். அரச அதிபருக்கு பிரிவுபசாரம்

[யாழ்ப்பாணம்]

கொழும்புக்கு மாற்றம்பெற்றுச்செல்லவிருக்கும் யாழ் அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையாவுக்கு, யாழ். அரசாங்க செயலக ஊழியர்கள் ஒன்றுசேர்ந்து இ. மாதம் 28-ம் திகதி பிரிவுபசாரவைபவம் ஒன்றை நடத்துகின்றனர்.

## அகதிகளுக்கு நிதிஉதவி

(பண்டத்தரிப்பு)

கடந்த ஜூலைமாத கலவரங்களினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து வந்துள்ள வலி தென்மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவைச்சேர்ந்த அகதிகளுக்கு 15ம், 16ம் கட்ட இலவச உணவுப் பொருட்களை வழங்க தற்போது ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இப்பிரிவிலுள்ள அகதிகளுக்கு அரசாங்கத்தின் அண்மைக்கால சுற்றுநிருபத்திற்கிணங்க 500 ரூபா தொடக்கம் 2000 ரூபா வரையிலான நிதி உதவியை வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த நிதிஉதவியை பெறவிரும்பும் அகதிகள் தம் பிரிவு கிராமசேவை உத்தியோகத்தருடன்தொடர்புகொண்டு இதற்கான பத்திரங்களைப் பெற்று பூர்த்திசெய்துகொடுக்கவேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

## இப்படியும் நடக்கிறது

இலங்கையில் இனப் பிரச்சினையைத் எப்படியாவதுதீர்த்து வைக்கவேண்டும் என்று வட்டமேசையில் பல தலைவர்களும் கூடி, மூளையைப் போட்டுக் குழப்பிக்கொண்டிருக்கிறார்கள்.

இது ஒரு புறம்.

மறுபுறம் —

தலைநகரிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கும் ஆங்கிலப் பத்திரிகைகளில் சில, சந்தர்ப்பத்துக்கு ஏற்றமாதிரியாவது — தற்காலிகமாக ஆவது — தமது "மரபை" மாற்றிக் கொள்வதாக இல்லை.

நேற்று வெளியான ஒரு வாரசந்த (ஆங்கில) ஏட்டின் சோதிடம் பகுதியில் "இலங்கையில் அதிகமான துட்ட கைமுனுக்கள் பிறப்பார்கள்" எனும் தலைப்பின் கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

"...இவ்வருடம் ஏப்ரல் மாதம் 17-ம் திகதி உதயமாகும் "பூபதி ராஜயோகத்"தை அடுத்து இந்த நாட்டில் மிகவும் வல்லமை பொருந்திய வீரர்கள் பிறப்பார்கள். மிகச் சக்தி வாய்ந்த இந்த போர் வீரர்கள் எதிர்ச் சக்திகளையெல்லாம் முறியடித்துவிடுவார்கள். ஆகவே ஏப்ரல் 17-ம் திகதிக்குப் பின்னர் துட்டகைமுனு, புறுன் அப்பு, கெப்பிட்டிப்பொல போன்ற வீரர்களை நாம் வைத்திருப்போம் என்பது சோதிடர்களின் மதிப்பீடு..."

"ஊடுருவி"

## மகேந்திரனின் மரணம்: தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் உரிமை கோருகிறது!

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு பஸ்நிலைய பிள்ளை மகேந்திரனின் [பப்பான்] மரணத்திற்குத் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், நேற்றுத் திகதியிட்டு வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுர மூலம் உரிமை கோரியுள்ளது.

அத்துண்டுப் பிரசுரத்தில்; மகேந்திரன் தமிழீழ விடுதலைப் போராளிகள் சிலரை இராணுவத்துக்குக் காட்டிக் கொடுத்ததாகவும், தனியார் வீட்டில் சுயநல நோக்குடன் கொள்ளையில் ஈடுபட்டதாகவும் குற்றங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இத்தீர்ப்பை நிறைவேற்றும் சமயம் எமது கெரில்லாக்களின் துப்பாக்கியிலிருந்து இரண்டு சன்னங்கள் மட்டுமே வெளியேறியது. இவை பப்பானுக்கு மட்டுமே தலையிலும் மார்பிலும் காயங்களை ஏற்படுத்தியது. வேறு துப்பாக்கிரவைகள் சிலவளிக்கப்படவுமில்லை; வேறு எவருக்கும், எமது கெரில்லாக்கள் காயம் ஏற்படுத்தவுமில்லை. தமிழீழ விடுதலைப் போராளிகளை காட்டிக்கொடுக்கும் கயவர்களுக்கு எம்மால் கொடுக்கப்படும் ஆகக் குறைந்த தண்டனை அவர்களது உடலிலிருந்து உயிரை துப்பாக்கிச் சன்னங்கள்மூலம் பறித்தலாகும்" என்றும் துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துண்டுப்பிரசுரத்தின் அடியில், 'அன்ரன் படைப் பிரிவு' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## கடற்றொழிலாளர் அபிவிருத்தித் திட்டம்

(பண்டத்தரிப்பு)

வலி. தென்மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடற்றொழிலாளர் நலன் கருதி ஐந்தாண்டு அபிவிருத்தித்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு கடற்றொழில் அமைச்சின் நடவடிக்கைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கடற்றொழில் பரிசோதகர் திரு. இ. இலங்கைநாயகத்தினால் தயாரிக்கப்பட்டு யாழ். மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அதிகாரியினால் சிபார்சுசெய்து அனுப்பிவைக்கப்பட்டுள்ள இந்த ஐந்தாண்டுத்திட்டத்தில் கடற்றொழிலாளருக்கு மாதகல், நவாலி ஆகிய இடங்களில் வீடமைப்புத்திட்டம் உருவாக்குதல், காக்கைதீவு, நவாலித்துறை சம்பில்துறை ஆகிய இடங்களில் வெளிச்ச வீடுகளை அமைத்தல், மாதகல் கடற்கரையில் கடல்நீர் கட்டுப்படாதவாறு அணைக்கட்டு கட்டுதல், காக்கைதீவுக்குக் குடிதண்ணீர் விநியோகம் செய்தல், மலசலகூடங்கள் நிறுவுதல் ஆகிய திட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

### இவ்வாரம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கல்விசேவைகள் முழு அமைச்சில் நடத்திய நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் இவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

கல்விச் சேவைக்குழு உறுப்பினர் டாக்டர் ஆ. கந்தையாவிடம் பட்டதாரி நியமனங்கள் குறித்துக் கேட்டபோது அவர் இவற்றைத் தெரிவித்தார். இவர்களுக்கான ஆசிரியர் சேவை முன்பயிற்சி அடுத்த மாதமளவில் நடத்தப்படவிருக்கிறது.

சுமார் 800 பேர் வரை விஞ்ஞானப்பட்டதாரி ஆசிரியர்களாக நியமிக்கப்படவுள்ளார்கள். (கு)

### புதிய சுவரொட்டி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தவறான காரியங்களில் ஈடுபடுபவர்களுக்கும் எச்சரிக்கை அறிவுறுத்தல் செய்யும் சுவரொட்டிகள் பல யாழ்ப்பாண நகரின் பலபகுதிகளிலும் ஒட்டப்பட்டுள்ளன.

இவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக இச்சுவரொட்டிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### குறைந்த கட்டண மின்சாரம்

(வேலணை

யாழ். மாவட்டத்தில் உள்ள பதிவு செய்யப்பட்ட சகல சனசமூக நிலையங்களுக்கும் சலுகை அடிப்படையிலான குறைந்த கட்டண மின்சார விநியோகம் கிடைக்க உள்ளது. (கு)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் கிராமணத்தாரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984-ம் ஆண்டு மார்ச் மாதம் 19 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 .Eelanadu-P. O. Box 49. Telegram: Eelanadu. Telephone: 22389—24126